**வலல்லாவிட்ட பிரதேச சபை**
**களுத்துறை மாவட்டம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2019 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2020 பெப்ரவரி 28 ஆந் திகதி கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் சுருக்கமான அறிக்கை 2020 ஆகஸ்ட் 18 ஆந் திகதியும் விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2020 செப்தெம்பர் 30 ஆந் திகதியும் தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

எனது அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படைப் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து வலல்லாவிட்ட பிரதேச சபையின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

**(அ) கணக்கீட்டுக் குறைபாடுகள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | மீளாய்வாண்டின் இறுதியில் ஓய்வூதிய திணைக்களத்திற்கு செலுத்த வேண்டிய ரூபா 2,952,925 தொகைக்காக கடன்கொடுத்தோர் நிதி ஏற்பாடு ஒதுக்கப்பட்டிருக்கவில்லை. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். | குறைந்த வருமானம் பெறும் சபையாக இருந்தமையால் இது வரை நிதி ஏற்பாடு ஒதுக்கப்படவில்லை. |
| (ii) | முன்னைய ஆண்டுகளின் முத்திரைக் கட்டணங்களுக்காக கிடைத்த ரூபா 4,608,010 தொகை மீளாய்வாண்டின் வருமானமாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். | 2020 இன் இறுதிக் கணக்கின் மூலம் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என அறியத்தருகின்றோம். |
| (iii) | ஆண்டின் இறுதி இருப்பு பெறுமதியாக பௌதீக இருப்பு கணக்கீடு செய்வதற்கு பதிலாக ரூபா 4,001,388 தொகையான புத்தக பெறுமதி கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். | 2020 இன் இறுதிக் கணக்கின் மூலம் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என அறியத்தருகின்றோம். |

| | | | |
|---|---|---|---|
| (iv) | நன்கொடையாக கிடைத்த ரூபா 65,537 பெறுமதியான மூன்று தண்ணீர் தாங்கிகளை மூலதனமாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். | 2020 இன் இறுதிக் கணக்கின் மூலம் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என அறியத்தருகின்றோம். |
| (v) | மீளாய்வாண்டில் நிர்மாணிக்கப்பட்ட ரூபா 676,102 தொகையான நீர் தாங்கி மற்றும் ரூபா 64,771 தொகையான சுடலைக்கூடத்தின் வேலி என்பன மூலதனமாக்கப்பட்டிருக்கவில்லை. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். | 2020 இன் இறுதிக் கணக்கின் மூலம் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என அறியத்தருகின்றோம். |

**(ஆ) இணக்கம் செய்யப்படாத கணக்குகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்படுகின்ற ரூபா 29,336,629 தொகையான 10 கணக்கு விடயங்களுக்குரிய மீதிகளுக்கும் அவற்றிற்குரிய பட்டோலைகளில் காண்பிக்கப்படுகின்ற மீதிகளுக்கும் இடையே ரூபா 6,759,602 தொகையான வேறுபாடு காணப்பட்டது. | உரிய மீதிகளின் வேறுபாடுகளை இணக்கம் செய்து கணக்குகளை சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | பட்டோலைகள் தயாரிக்கும் போது தவறுகள் ஏற்பட்டிருந்தது. 2020 இன் இறுதி கணக்கின் மூலம் சரிசெய்யப்படும் என அறியத்தருகின்றோம். |

**(இ) பெறவேண்டிய மற்றும் செலுத்தவேண்டிய கணக்குகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 02 வருட காலத்தை விஞ்சிய வேலைக் கடன்பட்டோர் ரூபா 730,688 மற்றும் ரூபா 960,789 தொகையான கடன்கொடுத்தோர் மீதி என்பவற்றை தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | மீதிகளை தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | 2020 இன் இறுதிக் கணக்கின் மூலம் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என அறியத்தருகின்றோம். |

**(ஈ) கணக்காய்விற்குத் தேவையான எழுத்துமூல சான்றுகள் இன்மை**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| நாளதுவரையாக்கப்பட்ட நிலையான சொத்துப் பதிவேடு மற்றும் வாகன மெய்மெய்யாய்வு அறிக்கை என்பன காணப்படாமையினால் ரூபா 28,155,109 கூட்டுத் தொகையான 02 கணக்கு விடயங்களை கணக்காய்வின் போது திருப்திகரமானதாக சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தது. | நிதிக்கூற்றுக்களில் காணப்படுகின்ற கணக்கு மீதிகளை உறுதிப்படுத்துகின்ற சான்றுகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். | பட்டோலைகளின் குறைபாடுகளை பூர்த்தி செய்து 2020 இன் இறுதிக் கணக்கின் மூலம் சமர்ப்பிக்கப்படும் என அறியத்தருகின்றோம். |

**1.4 இணங்காமைகள்**

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை**

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடனான தொடர்பு | | பெறுமதி | இணங்காமைகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|---|---|
| | | ரூபா | | | |
| (அ) | 1988 இன் பிரதேச சபைகள் (நிதி மற்றும் நிர்வாகம்) விதி 218 | 51,136,549 | காணி மற்றும் கட்டிடங்கள் ஒரு வருடத்திற்கு ஒரு முறையேனும் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டிருக் கவில்லை. | விதியின் பிரகாரம் நடவடிக்கை வேண்டும். | சபைக்குச் சொந்தமான காணி மற்றும் கட்டிடங்கள் தொடர்பாக மெய்மெய்யாய்வு செய்யப்படுகின்றது. |
| (ஆ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணம் 571(1) மற்றும் (2) | 1,774,720 | காலாவதியான வைப்புக்கள் தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவி ல்லை. | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். | காலாவதியான சகல வைப்புக்களையும் வருமானத்திற்கு எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. |
| (இ) | 2008 சனவரி 25 ஆம் திகதிய 1533/16 ஆம் | - | மெய்மெய்யாய்வின் மூலம் சுற்றாடல் அனுமதிப் பத்திரம் பெறவேண்டிய நிறுவனங்கள் | வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | இதற்காக ஈடுபடுத்துவதற்கு உரிய உத்தியோகத்தர்கள் காணப்படாதிருந்தது |

| | | |
|---|---|---|
| இலக்க வர்த்தமானி அறிவித்தல். | இனங்காணப்பட்டிருக் கவில்லை. | டன், எதிர் காலத்தில் வருமான பரிசோதகர் பதவி பூர்த்தி செய்யப்பட்டவுடன் முழுமையான மெய்மெய்யாய்வு மேற்கொள்ளப்படும் என அறியத்தருகின்றோம். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2019 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் வருமானத்தை விஞ்சிய மீண்டெழும் செலவினம் ரூபா 9,040,598 ஆக இருந்ததுடன் அதற்கு எதிராக முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 4,716,475 ஆக இருந்தது.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரியதாகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | | 2019 | | | | 2018 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | வருமானம் | மதிப்பிடப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை | மதிப்பிடப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | வீதவரியும் வரியும் | 2,648,580 | 2,745,710 | 2,301,336 | 444,374 | 2,785,796 | 2,171,699 | 3,039,076 | 1,799,048 |
| (ii) | வாடகை | 7,762,754 | 7,179,431 | 7,179,431 | - | 262,800 | 262,800 | 262,800 | - |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் | 280,000 | 384,507 | 384,507 | - | 90,000 | 320,679 | 320,679 | - |
| (iv) | ஏனைய வருமானம் | 56,027,370 | - | 5,547,593 | - | 63,513,839 | - | 67,872,012 | - |
| | | 66,718,704 | 10,309,648 | 15,412,867 | 444,374 | 66,652,435 | 2,755,178 | 71,494,567 | 1,799,048 |

### 2.2.2 வருமான சேகரித்தலின் செயலாற்றல்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| மீளாய்வாண்டின் ஆரம்பத்தில் ரூபா 65,849 தொகையான ஏக்கர் வரி நிலுவையில் ரூபா 6,499 தொகை மாத்திரம் ஆண்டின் போது அறவிடப்பட்டிருந்தது. | நிலுவை வருமானம் அறவிடப்பட வேண்டும். | காணி உரிமையாளர்களின் முகவரியை கண்டறிய முடியாதிருந்தமையினால் அறவிடுவதில் கஷ்டம் ஏற்பட்டுள்ளது. மிகவும் விரைவாக அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என அறியத்தருகின்றோம். |

### 2.2.3 இறைச்சிக் கடை வாடகை

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| 2012 ஆம் ஆண்டு முதல் கொண்டுவரப்படுகின்ற ரூபா 56,637 தொகையான நிலுவை இறைச்சிக் கடை வாடகை வருமானத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நிலுவை வருமானம் அறவிடப்பட வேண்டும். | பிரசோதனையொன்றை மேற்கொண்டு அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படும் என அறியத்தருகின்றோம். |

### 2.2.4 முத்திரைக் கட்டணம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| மீளாய்வாண்டின் இறுதியில் கிடைக்க வேண்டிய முத்திரைக் கட்டண வருமானம் ரூபா 1,391,990 ஆகும். | நிலுவை வருமானம் அறவிடப்பட வேண்டும். | 2019 ஆம் ஆண்டின் முத்திரைக் கட்டண பதிவேடு தயாரிக்கப்படுகின்றது என அறியத்தருகின்றோம். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் 3 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் பொழுதுபோக்கு வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | உப விதிகள் | | |
| | பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் 126 பிரிவின் கீழ் 16 பிரதான விடயங்களை நிறைவேற்றுவதற்காக உப விதிகள் விதிக்கப்பட வேண்டியிருந்த போதிலும், 2019 திசெம்பர் 31 ஆம் திகதி வரையிலும் சபையினால் 08 பிரதான விடயங்களுக்காக மாத்திரம் உப விதிகள் விதிக்கப்பட்டிருந்தது. | பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் பிரகாரம் உப விதிகளை விதிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | சபையின் தேவையின் அடிப்படையில் 08 உப விதிகள் விதிக்கப்பட்டிருந்ததுடன், தேவையின் பிரகாரம் ஏனைய உப விதிகளை விதித்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என அறியத்தருகின்றோம். |
| (ஆ) | செயல்நடவடிக்கைத் திட்டம் | | |
| (i) | செயல்நடவடிக்கைத் திட்டம் தயாரித்தலில் குறைபாடு. | | |
| | செயல்நடவடிக்கைத் திட்டத்திற்காக கிரயங்கள் வெவ்வேறாக இனங்காணப்பட்டு கால அட்டவணையின் பிரகாரம் செயற்திட்டங்களை அமுல்படுத்துதல் தொடர்பாக முறையான செயல் நடவடிக்கைத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | சரியான செயல் நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட வேண்டும். | சுட்டிக் காட்டப்பட்டுள்ள குறைபாடுகளை சரி செய்து 2021 இன் செயல்நடவடிக்கைத் திட்டம் தயாரிக்க நடவடிக்கை எடுக்கப்படும் என அறியத்தருகின்றோம். |
| (ii) | செயல்நடவடிக்கைத் திட்டத்தின் செயற்திட்டங்கள் நிறைவேற்றப்படாமை மற்றும் வெளிவாரி செயற்திட்டங்கள் நிறைவேற்றப்பட்டமை. | | |
| | செயல்நடவடிக்கைத் திட்டத்தில் 17 செயற்திட்டங்கள் இனங்காணப்பட்ட போதிலும், அந்த செயற்திட்டங்களில் 2019 ஆம் ஆண்டில் எந்தவொரு செயற்திட்டமும் மேற்கொள்ளப்படாதிருந்ததுடன், செயல்நடவடிக்கைத் திட்டங்களுக்கு புறம்பாக 03 செயற்திட்டங்களுக்காக ரூபா 394,108 செலவிடப்பட்டிருந்தது. | செயல் நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். வெளிவாரி செயற்திட்டங்களுக்காக உரிய அங்கீகாரம் பெறப்பட வேண்டும். | நிதி நிலைமை நல்ல நிலைக்கு வந்ததும் திட்டமிடப்பட்ட செயற்திட்டங்களை பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என அறியத்தருகின்றோம். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | நிலைபேறான அபிவிருத்தி இலக்கு | | |
| | நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள் தொடர்பாக 2019 ஆம் ஆண்டில் நிலைபேறான அபிவிருத்தி திட்டமொன்று தயாரிக்கப்பட்டு 11 செயற்பாடுகள் திட்டமிடப்பட்டிருந்த போதும் அதில் எந்தவொரு செயற்பாடும் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை. | உரிய சுற்றறிக்கை மற்றும் வழிகாட்டல்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | நிலைபேறான அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம் திட்டமிடப்பட்டிருந்த போதிலும், அமுல்படுத்துவதற்காக நிதி நிலைமை போதியளவாக காணப்படவில்லை. எதிர்காலத்தில் இலக்குகளை அடைந்து கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என அறியத்தருகின்றோம். |

**3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 12 நிறுவனங்களுக்குரிய காலாவதியாகியிருந்த சுற்றாடல் அனுமதிப் பத்திரங்களை மீண்டும் புதுப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | சுற்றாடல் அனுமதிப் பத்திரத்தை விநியோகிக்கும் செயற்பாடுகள் முறையாக மேற்கொள்ளப்படல் வேண்டும். | சுற்றாடல் அனுமதிப் பத்திரம் பெறப்படாதுள்ள தொழில் முயற்சி உரிமையாளர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளதுடன், அவர்கள் முன்வராமை காரணமாக உரிய அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டிருக்கவில்லை என அறியத்தருகின்றோம். |

**3.3 மனித வள முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) ஊழியர் வெற்றிடம் மற்றும் மிகை | | |
| 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மூன்றாம் நிலையில் 01 பதவி, இரண்டாம் நிலையில் 11 பதவிகள் மற்றும் ஆரம்ப நிலையில் 10 பதவிகள் என்பவற்றில் வெற்றிடங்கள் காணப்பட்டதுடன், இரண்டாம் நிலையில் 02 பதவிகளில் மிகையொன்று | தேவையான வெற்றிடங்களை விரைவாக நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியிருந்ததுடன், மிகை பதவிக்காக | ஆரம்ப நிலையின் பதவிக்காக ஆட்சேர்ப்புக்கள் முகாமைத்துவ சுற்றறிக்கை இலக்கம் 01/2020 இன் மூலம் முடியாதிருந்தது. ஏனைய பதவிகள் திணைக்கள மட்டத்தில் |

| | | |
|---|---|---|
| அவதானிக்கப்பட்டது. | அங்கீகாரம் பெறப்பட வேண்டும். | சேர்க்கப்பட வேண்டும் என அறியத்தருகின்றோம். |

(ஆ) ஊழியர் கடன்

| | | |
|---|---|---|
| மரணமடைந்த, ஓய்வுபெற்றுச் சென்ற, சேவையை விட்டு விலகிய மற்றும் இடம் மாற்றலாகிச் சென்ற 12 ஊழியர்களிடம் இருந்து அறவிட வேண்டிய ரூபா 272,925 தொகையான கடன் மீதி அறவிடப்பட்டிருக்கவில்லை. | நிலுவை கடன் மீதி அறவிடப்பட வேண்டும். | நிலுவை கடன் பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என அறியத்தருகின்றோம். |

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

**தீர்வுகாணப்படாதுள்ள கணக்காய்வு அவதானிப்புக்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2018 இன் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது அறிக்கையின் 2.2.1(அ) மற்றும் (உ) பந்திகளுக்குரிய அவதானிப்புக்களை சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | சரிசெய்வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | 2020 இன் இறுதிக் கணக்கில் சரிசெய்யப்படும் என அறியத்தருகின்றோம். |